1967 மார்ச் 28]

திரு. கே. விநயகம் : மூன்று மொழித் திட்டத்தை நாங்கள் வரவேற்கவில்லை என்று சொல்லுகின்ற கட்சி ஆட்சிக்கு வந்திருப்பதால் அவர்கள் விரும்புகிற இரண்டு மொழித் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வர என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணுதுரை : மூன்று மொழித் திட்டத்தை இந்தச் சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறதா என்பது இன்னும் தீர்மானம் ஆகவில்லை. சர்க்காரிலே இடம் பெற்றிருக்கிறவர்கள் தனிப்பட்ட கருத்தாக இரண்டு மொழிகள் இருந்தால் போதும் என்று பேசியிருக்கிருர்கள். தனிப்பட்ட கருத்தும் சர்க்கார் கருத்தும் பல வேளைகளில் ஒன்ருகப் போவதுண்டு. இதிலே, இரண்டும் ஒன்றுபடவில்லை. சர்க்கார் மும்மொழித் திட்டத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறது. மும்மொழித் திட்டம் நம்மால் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு நேர்மையான முறையில் எல்லா இடங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துவது இப்போதுள்ள சர்க்காருடைய போக்கு.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இத்துடன் வினு நேரம் முடிவடைகிறது.

[குறிப்பு :—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) பாலாறு பேசின் விதிகளை அகற்றல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்த அலுவல், ஒத்திவைப்புத் தீர்மானங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிருர்கள். " சட்டப் பேரவை விதி 42-ன் படி உணவு உற்பத்தியை பெருக்குவதில் நமது ராஜ்யத்திலே இரண்டாவது ஸ்தானம் வகிப்பது வடார்காடு மாவட்டமாகும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லும் இந்த சமயத்தில் வடார்காடு மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தி செய்வதற்கு பாலாறு பேசின் விதிகள் முட்டுக் கட்டையாக இருப்பதால் அதை ரத்து செய்ய வேண்டுமென்பதைப்பற்றியும், போதுமான ரசாயன உரம் சப்ளை இல்லாததைப் பற்றியும், நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தாமலிருப்பதைப் பற்றியும் விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் " என்று கூறியிருக்கிருகள். உறுப்பினர் அவர்கள் 42-வது விதியின் கீழ் கொண்டு வந்திருப்பதைப் பற்றி மகிழ்ச்சியடைகிறேன். அதே சமயத்தில் அதைத் தொடர்ந்து 50-வது விதி இருக்கிறது. அதன்படி ஒத்திவைப்பு தீர்மானம் வருவதாக இருந்தால் அது அண்மையில் நடைபெற்ற—ரீஸன்ட் அக்கான்ஸ்—ஒரு காரியத்தைப் பற்றி இருக்கவேண்டும். அவர்கள் கொடுத்துள்ளது பாலாறு பேசின் விதிகளை அகற்ற வேண்டும் என்பது பற்றியாகும். இந்த பாலாறு பேசின் ரூல்ஸ் என்பது இந்த அரசினர் கொண்டு வந்தது அல்ல, இதற்கு மூன்று

அரசாங்கம் **கொண்டு வந்ததுமல்ல.** வெள்ளைக்காரர், பிரிட்டிஷார் ஆளுகிற காலத்தில் வந்த பாலாறு பேசின் ரூல்ஸை அகற்றவேண்டுமென்றல் அதை அவசரத் தீர்மாகக் கருத அகற்ற வேண்டுமென்றல் அதை அவசரத் தீர்மானமாகக் கருத முடியாது. அது அண்மையில் நடைபெற்ற காரியமாகவும் கருத முடியாது. ஆகவே, அதைக் கொண்டுவர நான் அனுமதி மறுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) மின்சாரக்குழு எழுப்பும் கடனுக்காக விவசாயிகள், நிர்ப்பந்திக்கப்படுதல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் 42-வது விதியின்கீழ் சட்டசபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்குமாறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறர்கள்.

"தமிழ்நாடு மின்சாரக் குழுவினர் ரூபாய் மூன்று கோடி கடன் எழுப்புவதில் அதிகாரிகள், விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்தி வசூலிப்பதாகத் தகவல் வந்துள்ளது. பணம் கொடுக்க இயலாதவர்களிடம், வற்புறுத்தி கமிஷன் தொகையை மட்டும் விவசாயிகளிடம் வசூல் செய்து கொண்டு உடனே கடன் பத்திரங்களை பாங்குகளில் வைத்து மீதம் ரூ. 85-யையும் பெற்றுக்கொண்டு, கடன் வசூலித்து விட்டதாகக் கூறுகின்றனர். விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது" என்று கொடுத்திருக்கிறர்கள். இது சாதாரண அரசினர் நிர்வாகத்திற்குப் புறம்பானதாகக் கருத முடியாது. ஒத்தி வைப்புத் தீர்மானம் சாதாரண நிர்வாக விஷயத்திற்கு, ஆர்டினரி அட்மினிஸ்ட்ரேஷனுக்குப் புறம்பாக இருக்கவேண்டும். ஆர்டினரி அட்மினிஸ்ட்ரேஷனுக்கு, சாதாரண நிர்வாகத்திற்குப் புறம்பானதாக இருப்பதாக இதைக் கருத முடியாது என்பது மட்டுமல்லாமல் கவர்னர் உரை மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் இன்று பேசியிருக்கிறர்கள். அதில் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு காரணங்களினல் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்.

(அ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இந்தப் பேரவைக்கு நான் தெரிவிக்க வேண்டிய அறிவிப்புகள் சில உள்ளன.

முதலாவதாக, 1967-68-ம் ஆண்டுக்குரிய உரிமைக் குழுவிற்கு ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு இந்தப் பேரவை 12 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு 12 உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெயர்களாவன :—

1. திரு. சி. கோவிந்தராஜன்.
2. திரு. க. இராமமூர்த்தி.
3. திரு. எம். வில்லியம்.